**Crl. Misc.39**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure).**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, KARUR**
**DVC 37 /2024**

**Deposition of Witness : PW1**

| Name | மோகனாம்பாள் | Taluk | |
|---|---|---|---|
| Husband Name | பாஸ்கரன் | Village | |
| Age | | Calling | |
| **Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969 (Act 44 of 1969) on the day of 02.04.2025** | | | |

**முதல் விசாரணை தொடர்ச்சி**

எனது வழக்கை நிருப்பிப்பதற்காக கீழ்க்கண்ட ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

| S.No | Dated | Documents | Exhibits |
|---|---|---|---|
| 1. | | ஆதார் அட்டை – நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது. | ம.சா.ஆ.3 |
| 2. | 15.10.2005 | ஷோபிகாவின் பிறப்பு சான்றிதழ் – நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது. | ம.சா.ஆ.4 |
| 3. | 29.04.2011 | தாரணிஸ்ரீயின் பிறப்பு சான்றிதழ் – நகல் அசலுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டது. | ம.சா.ஆ.5 |
| 4. | 22.11.2024 | கரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தின் கொடுத்த புகார் மனுவிற்கான மனு ரசீது – அசல் | ம.சா.ஆ.6 |

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

1) 2, 3 எதிர்மனுதாரர்கள் எனது மாமியார், மாமனார் என்றால் சரிதான். 2ம் எதிர்மனுதாரர் 3ம் எதிர்மனுதாரரின் 2 வது மனைவி என்றால் சரிதான். என் கணவரின் அம்மாவும், 2 வது எதிர்மனுதாரரும் அக்கா, தங்கை என்றால் சரிதான். என் கணவரின் உடன் பிறந்தவர்கள் ஒரு தங்கை மட்டும்தான். 2ம் எதிர்மனுதாரருக்கு எத்தனை

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ),
கரூர்.

குழந்தைகள் என்றால் 2 பெண் குழந்தைகள். எல்லோருக்கும் திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரான எனது கணவருக்கு பிறவியிலேயே காது கேட்காது என்றால் பிறவியிலேயே காது கேட்குமா , கேட்காதா என்று எனக்கு தெரியாது. மேற்படி விசயம் தெரிந்து தான் நான் திருமணம் செய்து கொண்டேன் என்றும், நான் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பின்னிட்டு தான் எனக்கு தெரிய வந்தது. எனது அப்பா என்ன வேலை செய்கிறார் என்றால் வேலாயுதம்பாளையம் நகர பஞ்சாயத்தில் துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகிறார்.

2) என்னுடன் பிறந்தவர்கள் ஒரு அண்ணன் மற்றும் ஒரு தங்கை ஆவார். எனது திருமணத்தின்போது எனக்கு 5 பவுன் நகை , ரூ.1 1/2 லட்சம் மதிப்பிலான கட்டில், பீரோ , மெத்தை போன்ற பொருட்கள் கொடுத்ததாக சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. எனது குடும்பம் ஏழ்மையான குடும்பம் என்றும், 1ம் எதிர்மனுதாரருக்கு காது கேட்காது என்ற குறையினால் எதிர்மனுதாரர்கள் வீட்டில் எந்த சீர்வரிசையும் கேட்கவில்லை என்றும், நாங்களும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

3) திருமணத்திற்கு பின் 3 மாதங்கள் கழித்து 1ம் எதிர்மனுதாரருக்கு சிகரெட் மற்றும் குடிபழக்கம் இருப்பது தெரியவந்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது வரை குடித்து விட்டுதான் இருக்கிறார். 2018 வரையிலும் நானும், எதிர்மனுதாரர்களும் கூட்டு குடும்பமாக வசித்து வந்தோம் என்றால் சரிதான். 2வது எதிர்மனுதாரர், 3வது எதிர்மனுதாரர் என்ன வேலை செய்கிறார்கள் என்றால் துப்புரவு பணியாளர்களாக வேலை செய்கிறார்கள். எனக்கு திருமணமாகி எத்தனை வருடம் ஆகிறது என்றால் சுமார் 22 வருடம் ஆகிறது. மேற்படி 22 வருடத்தில் எத்தனை முறை கொடுமைப்படுத்தியதாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 2 முறை கொடுத்துள்ளேன். பலமுறை ஊர்த்தலைவர் முன்னிலையில் பஞ்சாயத்து பேசப்பட்டது. அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

Sd/–R.Mahesh

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ),
கரூர்.

வாய்மொழியாகத்தான் பஞ்சாயத்து பேசப்பட்டது.

4) கூட்டு குடும்பமாக இருந்த சமயத்தில் தொகுப்பு வீட்டில் நாங்கள் தனியாக வாழ்ந்து வந்தோம் என்றும் , ஆனால் ஒன்றாக சமைத்து வந்தோம் என்றால் சரியல்ல. 2 வருடங்கள் மட்டும், 2, 3 எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்ததால் தனியாகத்தான் சமையல் செய்தேன். திருமணம் முடிந்து, 2018 ம் வரை 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் வீட்டிற்கு தேவையானதும், குழந்தைகளுக்கு தேவையானதுமான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர்கள் என்னையும், குழந்தையையும் பராமரிக்காத காரணத்தினால் தான் நான் வீட்டு வேலைக்கு சென்றேன் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் எத்தனை வருடமாக துப்புரவு தொழிலாளராக பணியாற்றி வருகிறேன் என்றால் 5 வருடங்களாக பணியாற்றி வருகிறேன். 15 வருஷமாக துப்புரவு தொழிலாளராக பணியாற்றி வருகிறேன் என்றால் சரியல்ல.

5) மாதசம்பளம் ரூ. 8 ஆயிரம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல. ரூ. 5 ஆயிரம் மட்டும்தான் வாங்கி வருகிறேன். அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வங்கி புத்தகம் உள்ளது. எனது 2 குழந்தைகளும் அரசு பள்ளியில் படிக்கிறார்கள் என்றால் சரிதான். அரசு பள்ளியில் படிப்பதால் செலவு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனது முதல் பெண் நர்சிங் படித்து வருகிறார் என்றும், படிப்பிற்காக ரூ. 20 ஆயிரம் 2, 3 எதிர்மனுதாரர்கள் கொடுத்தார்கள் என்றால் கட்டாயத்தில்தான் கொடுத்தார்கள். 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் எந்த காலத்திலேயும் என்னையோ, எனது பெற்றோரையோ கேவலமாக பேசியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

6) எனது மாமனார் வீட்டிற்கு அருகில் தொகுப்பு வீட்டில் குடியிருந்தேன் என்று சொல்லியுள்ளபோது அந்த வீடு தற்போது யாருடைய பெயரில் உள்ளது என்றால் 1, 3 எதிர்மனுதாரர்கள் பெயரில் உள்ளது. பஞ்சாயத்து மூலமாக இலவச பட்டா கொடுத்தார்கள் , அப்போது கவுன்சிலருக்கு எனது பெயர் தெரிந்ததால் என் பெயரில் பட்டா கொடுத்தார். நான் சொல்வது பொய் என்றும், பட்டா 3 எதிர்மனுதாரரின்

Sd/–R.Mahesh

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ),
கரூர்.

தகப்பனாரின் பெயரில் இருந்தது என்றும், அதை எனது பெயருக்கு பொய் சொல்லி மாற்றி கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. பஞ்சாயத்தினால் மாற்றப்பட்டது. பஞ்சாயத்தில் எந்த மனுவும் கொடுக்காமல் பட்டா மாற்றம் செய்யமாட்டார்கள் என்று சொன்னால் நான் எந்த மனுவும் கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பட்டாதான் என் பெயரில் உள்ள பட்டா என்றால் சரிதான். **மேற்படி பட்டா எ. ம.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது.**

7) 2014 ம் வருடம் 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் கொடுமைப்படுத்தியதால் நான் என் குழந்தைகளை அழைதது கொண்டு என் தகப்பனார் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்று சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. வேலாயுதம்பாளையம், அண்ணா நகர், முருகன் கோவில் தென்புறம் அருகே நான் சொந்தமாக வீடு கட்டுவதற்கான எனது விருப்பத்தின்பேரில் எனது குழந்தைகளை அழைத்து சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் அரவிந்த் டிரேடர்சில் சுமார் 20 வருடங்களாக வேலை செய்து வருகிறார். அவர் என்ன சம்பளம் வாங்கி வருகிறார் என்றால் எனக்கு தெரியவில்லை. அவரது மாத சம்பளம் ரூ. 10, 220/- என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அடிக்கடி குடித்துவிட்டு வந்து என்னை அடித்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றும், அவர் தினமும் குடித்திருந்தால் ஒரே நிறுவனத்தில் 20 வருடங்கள் வேலை செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. அவர் இரவில் தான் குடித்து விட்டு வருவார். நான் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

8) 2018 ம் ஆண்டு பிரிந்ததிலிருந்து 2024ம்ஆண்டில் தான் நான் திரும்ப வந்தேன் என்று சொன்னால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் நான் விவாகரத்து கோரி எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இடைப்பட்ட காலத்தில் நானும், எனது குழந்தைகளும் வீட்டிற்கு வந்து 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுடன் சந்தோஷமாக இருந்து விட்டு சென்றேன் என்றும், மாத சம்பளத்தில் ரூ. 4 ஆயிரம், 5 ஆயிரம் பெற்று செல்வது வழக்கமாக வைத்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 2024ம் வருடத்தில் வந்ததின் நோக்கம் நீதிமன்றத்தில்

Sd/-R.Mahesh

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ),
கரூர்.

வழக்கு தாக்கல் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் வீட்டில் இருந்ததால் அதை எடுத்து செல்வதற்கு என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 எதிர்மனுதாரர்களுக்கு நான் வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. அசல் மனுவை வாபஸ் வாங்கு என்று 1ம் எதிர்மனுதாரர் என்னையும், குழந்தையையும் கொலைமிரட்டல் விடுத்தார் என்று சொன்னால் சரியல்ல.

9) அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 22.11.2024ம்தேதி புகார் கொடுத்தது வழக்கிற்காக ஆவணம் தயார் செய்வதற்காக கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. 21.11.2024ம்தேதியன்று இரவு 1ம் எதிர்மனுதாரர் என்னை கேஸை வாபஸ் வாங்குமாறு கொலை மிரட்டல் விடுத்ததால் மறுநாள் புகார் கொடுத்தேன். நான் அவ்வாறு ஒரு சம்பவம் நடந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளை கொடுமை என்று சொல்ல முடியாது என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் எப்போதும் எனக்கும், குழந்தைகளுக்கும் செய்யவேண்டிய கடமைகளை சரியாகத்தான் செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு காது கேட்காது என்ற காரணத்தினால் அந்த குறையை தவறாக பயன்படுத்தி அவர் மேல் பொய்யான சங்கதிகளை சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

10) 1ம் எதிர்மனுதாரர் எப்போதும் என்னையும், குழந்தையையும் வேண்டாம் என்று சொல்லவில்லை என்றும், பிரிந்திருந்த காலகட்டத்திலும் பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. நானாகத்தான் எனது விருப்பத்தின்பேரில் தனியாக வாழ்ந்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் குறைவான சம்பளம் வாங்குவதால் நான் கோரியுள்ள இழப்பீடு பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/–R.Mahesh
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம்(பொறுப்பு ),
கரூர்.